போலந்து



ஊழியக்களமான ஒரு பள்ளி

''கவலைப்படாதீர்கள், நாங்கள் ஜெபிக்கிறோம்'' என்று சொன்னார்கள். ஜெபித்தார்கள். மழையும் நின்றது.

வார்சாவுக்கு அருகிலுள்ள அரசுப் பள்ளிகளில் ஏறக்குறைய 20 ஆண்டுகளாக போலந்து மொழியையும் இலக்கியத்தையும் கற்பிக்கி ஆசிரியையாக அகதா பணியாற்றி வந்தார். அவருக்கு ஆசிரியப்பணி பிடிக்கும், ஆனால் காலம் செல்லச் செல்ல ஏதோ ஒன்று குறைவுபடுவ தாக உணர்ந்தார். வகுப்பில் மாண வர்கள் அதிகம் இருந்தார்கள், அவ சர அவசரமாக பாடங்களை நடத்த வேண்டியிருந்தது, அதனால் மாண வர்களைப்பற்றித்தெரிந்துகொள்ள மிகக்குறைந்த நேரமே இருந்தது.

''ஏதோ பாடம் நடத்தினோம், சென்றோம் என்று இராமல், என் மாணவர்களைப்பற்றி அறிந்து கொள்ள ஆசைப்பட்டேன். அவர்க ளுடைய தேவைகள், திறமைகள், அவர்களின் குடும்பங்கள் என அனைத்தையும்பற்றி உண்மையி லேயே தெரிந்துகொள்ள விரும்பி னேன்''என்று அகாதா சொன்னார்.

அந்த விஷயத்தில் கண்டிப் பாக ஒரு மாற்றத்தைச் செய்தாக வேண்டுமென 2018 ஆம் ஆண்டில், தீர்மானம் எடுத்தார்.

அதே ஆண்டில், அட்வென் டிஸ்ட் பெற்றோர் சிலர் ஒன்றுகூடி, ஒரு ஆலய வளாகத்தில் மழலையர் பள்ளி வயதுக் குழந்தைகளுக்கு ஆங் கில வகுப்புகளை நடத்தத் தொடங் கினார்கள். அந்த ஒரு சில குடும்பத் தினரால் தொடங்கப்பட்ட அந்த வகுப்பை தொடர்ந்து நடத்துவதற் கான அவசியம் ஏற்பட்டது. அதின் நிமித்தமாக, அந்த வகுப்புகளில் கலந்துகொண்ட மாணவர்களின் பெற்றோர், விசுவாசம், உறவுகள், நோக்கம் ஆகியவற்றிற்கு உதவுகிற

ஒரு அட்வென்ட்டிஸ்ட் பள்ளியில் தங்கள் பிள்ளைகள் படிப்பதற்கு ஆசைப்பட ஆரம்பித்தார்கள்.

தங்களுக்கு உதவுமாறு அந்தப் பெற்றோர் அகதாவிடம் கேட்டுக் கொண்டனர்.

அகாதாவுக்கு என்ன செய்வ தென்று தெரியவில்லை. ஒரே ஒரு வகுப்பறை மட்டுமே இருந்தது, மேலும் அதற்கான நிதியும் மூன்று மாதங்களுக்கு தாக்குப்பிடிக்கிற அளவுக்குத்தான் இருந்தது. அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டால், நிரந்தர ஆசிரியை பணிக்கான சம் பளம் கிடைக்காது; அதே நேரத்தில் வீட்டுக்கடனையும் அடைக்கவேண் டும், பெரும்பாலும் தனது கணவ ரின் வருமானத்தையே நம்பியிருக்க வேண்டும்.

''நான் நிறைய ஜெபித்தேன், அது என் வாழ்க்கையின் மிகக் கடின மான முடிவுகளில் ஒன்றாக இருந் தது'' என்று அகாதா சொன்னார்.

அவர் தன்னுடைய கணவரி டம் ஆலோசனை கேட்டபோது, ''முயற்சி செய்துதான் பாரேன்'' என்று சொல்லிவிட்டார்.

நம்பிக்கையுடன் அடுத்த அடியை எடுத்து வைத்தார் அகதா. மூன்று மாதங்கள் கடந்தன; அதன் பிறகு கூடுதல் நிதி கிடைத்தது.''எங் களிடம் பணம் இல்லாத ஒரு தரு ணமே இருந்ததில்லை, ஆரம்பம் மிகவும் கடினமாக இருந்தபோதி லும், தேவன் அதை ஆரம்பத்திலி ருந்தே ஆசீர்வதித்தார்'' என்று கூறி னார்.

அவ்வாறு நிச்சயமற்ற ஒரு சூழலில் ஆரம்பிக்கப்பட்டதுதான் 'காம்பஸ்' பள்ளி. அது 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான பிள்ளை களுக்கு கல்வி கற்பிக்கப்படுகிற ஒரு அட்வென்டிஸ்ட் ஆரம்பப் பள்ளி யும், மழலையர் பள்ளியும் ஆகும். சில வருடங்களிலேயே, மாணவர் சேர்க்கை ஆரம்பப் பள்ளியில் 50 ஆகவும், மழலையர் பள்ளியில் 32 ஆகவும் உயர்ந்தது. தங்களுடைய பணியை தெய்வீக அழைப்பாகக் கருதுகிற ஆசிரியர்கள் மற்றும் ஊழி யர்களின் ஆதரவால் இது சாத்திய மானது.

இந்த வெற்றிக்கு தன்னுடைய குழுவினரே காரணமென அகாதா கூறுகிறார். ''இது வெறும் வேலை மட்டுமல்ல, நாங்கள் இதை ஒரு ஆவிக்குரிய பணித்தளமாகவும் பார்க்கிறோம்'' என்று சொன்னார். அனைவரும் ஒன்றிணைந்து செயல் பட்டு, குறிப்பிட்ட நோக்கமும் ஆவிக் குரிய அரவணைப்பும் காண்ப்படு கிற ஒரு பள்ளி கலாச்சாரத்தை உரு வாக்கியுள்ளனர்.

பள்ளி வளர்ந்தபோது, அத னுடைய கல்வி நியதியும் வளர்ந் தது. அட்வென்டிஸ்ட் கல்வி என்பது வழக்கமான பாடத்திட்டத்துடன் வேதாகம வகுப்பையும் சேர்ப்பது மட்டுமல்ல என்பதை அகதாவும் அவரது சக ஊழியர்களும் உணர்ந் தனர். அது ஒரு பிள்ளையின் உடல், உணர்ச்சி, அறிவுமற்றும்ஆவிக்குரிய அம்சங்கள் அனைத்தின் வளர்ச்சி யையும் உள்ளடக்கியது.

அதில் வெளிப்புறக் கல்வி ஒரு முக்கியப் பங்காற்றுகிறது. வேத வகுப்புகளை வகுப்பறைக்குள்ளே தொடங்கி, பிறகு இயற்கையான சூழ

லில் தொடருகின்றனர். அங்கே பிள்ளைகள் தங்களைச் சுற்றி காணப்படுகிற மேகங்கள், மரங்கள், மண் மற்றும் வானம் ஆகியவற்றோடு வேதாகம வசனங்களை ஒப்பிட்டுப் புரிந்துகொள் கிறார்கள்.

''இயற்கையில் அமர்ந்து கற்றுக் கொள்ளும்போது, தேவனுடைய படைப்பின் மத்தியில் சிறுவர்கள் இருக்கிறார்கள், தூய்மையான காற்றைச் சுவாசிக்கிறார்கள், ஓடி ஆடி விளையாடுகிறார்கள், அதனால் அவர்களின் மனம் நன்றாகச் செயல் படுகிறது. மேலும், இயற்கை என் பது தேவன் உருவாக்கிய ஒன்று என்பதையும் அவர்கள் புரிந்துகொள் கிறார்கள்'' என்று அகதா கூறினார்.

மொண்டெஸோரி கல்வி முறைகள், ஒவ்வொரு குழந்தை யின் திறமைக்கு ஏற்ப ஆசிரியர்கள் கற்றுக்கொடுக்க உதவுகின்றன. சிறு வயது மாணவர்கள் தங்களுக்குத் தேவையான உபகரணங்களின் உத வியால், தங்களால் முடிந்த வேகத் தில், தேவையான வழிகாட்டுதலு டன் கற்றுக்கொள்கிறார்கள்.

காம்பஸ் பள்ளியில் விசுவாசம் வகுப்பறையோடு மட்டும் நின்றுவிடு வதில்லை. மாணவர்கள் தங்கள் பகுதியிலுள்ள முதியவர்களைச் சந் திப்பது, வேத வசனங்கள் அடங் கிய கையால் செய்யப்பட்ட வாழ்த்து அட்டைகளைப் பகிர்வது மற்றும் தனிமையில் இருப்பவர்களுக்காகப் பாடுவது போன்ற சமூகச் சேவை களிலும் ஈடுபடுகிறார்கள்.

வெள்ளிக்கிழமைகளும் இங்கு வித்தியாசமாக இருக்கும். மாணவர்கள் தோட்ட வேலைகளி லும், பள்ளி வளாகத்தைச் சுற்றிச் செய்யவேண்டிய வேலைகளிலும் ஈடுபடுகிறார்கள். வண்ணமடிப்பது, பெருக்குவது, இலைகளைக் கூட்டு வது, விறகு சேகரிப்பது போன்ற வேலைகளைச் செய்கிறார்கள். மண் ணில் விதைக்கப்படும் விதைகள் தேவ வார்த்தையைப்பற்றிய பாடங் களாக மாறுகின்றன. வாரத்தின் இறுதி நாட்களில், பெரும்பாலும் தீ மூட்டி சுற்றிலும் அமர்ந்து, மழலை யர் பள்ளி பிள்ளைகளும் பெரிய மாணவர்களும் ஒன்றாகக் கூடி, பேசி, விளையாடுகிறார்கள்.

காலப்போக்கில், பிள்ளைகளி டம் மாற்றம் உண்டானதை அகதா வும் அவருடைய சக ஊழியர்களும் கவனித்தனர்.

''இங்குள்ள சூழல் குழந்தை களின் இதயங்களை மாற்றுகிறது, அவர்கள் ஒருவருக்கொருவர் நாக ரிகமாகப் பேசுகிறார்கள், தங்கள் வார்த்தைகள் யாரையாவது புண் படுத்துமா என்று யோசித்துப் பேசு கிறார்கள். முதல் வகுப்பு பிள்ளை கள்கூட மற்றவர்களின் உணர்வு களைப் புரிந்து கொள்கிறார்கள். பரி சுத்த ஆவியானவர் கிரியை செய் வதைக் காண்கிறோம்'' என்று சொன் னார்.

மழை பெய்துகொண்டிருந்த ஒரு நாளில் வெளியில் சென்றிருந் தார்கள். எட்டு வயதுடைய இரண்டு பிள்ளைகள், அதாவது, அவரது மக ளும் அவள் வகுப்புத் தோழனும், ''கவலைப்படாதீர்கள், நாங்கள் ஜெபிக்கிறோம்'' என்று சொன்னார் கள். அவர்கள் ஜெபித்தார்கள். மழை யும் நின்றது.